**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**
**OS 33/2015**

**20.02.2024**

**வா.சா. 1 மோகன்தாஸ் த/பெ. மாரியப்ப வள்ளால தேவர் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி :-**

எனது தகப்பனார் இறக்கும் வரை அவரது வாரிசுகள் அனைவரிடமும் ராசியாக தான் இருந்தார். அவர் இறக்கும் போது இந்திய தேசிய இராணுவ ஓய்வுதிய தொகை ரூ. 10000 வாங்கியிருந்தார். முத்துபேட்டை இந்தியன் வங்கி கிளையில் அந்த ஓய்வுதியத் தொகையை பெற்றுவந்தார். இந்த வழக்கு சொத்துகள் அனைத்தையும் 1986 பட்டா மாற்றப்பட்டது. இந்த வழக்கில் உள்ள அனைத்து சொத்துக்களுக்கும் பட்டா மாற்றப்பட்டுள்ளது. எனது தகப்பனார் விட்டு சென்ற அனைத்து சொத்துகளையும் சேர்த்து எனது சகோதரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் எந்த சொத்தையும் விடவில்லை. இந்த சொத்தில் உயில் மட்டும் தான் பிரச்னை என்றால் வாதி எந்த சொத்தையும் பிரிக்கவில்லை அனைத்தும் கூட்டு பட்டாவாக உள்ளது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். பி.வா.சா.ஆ.1 மற்றும் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தல் எனது சகோதரிகள் ஏழு பேர் பெயரிலும் பட்டா உள்ளது. பி.வா.சா.ஆ. 3 ஆவணத்தில் பட்டா எண் 45, 496 ஆகியவைகள் எனது பெயரில் உள்ளது. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள சொத்து எனது தகப்பனார் சம்பாதித்து வாங்கியது ஆகும். 1986 ல் என் பெயரில் பி.வா.சா.ஆ. 3 கண்ட சொத்துகளை பட்டா மாற்றிக்கொண்டேன். எந்த ஆவணத்தின் அடிப்படையில் வட்டாட்சியர் பி.வா.சா.ஆ. 3 கண்ட சொத்தை பட்டா மாற்றிக்கொடுத்தார், ஆவணம் தாக்கல் செய்யவில்லை எனது அப்பா பட்டா மாற்றிக்கொடுத்தார். எனது தந்தை எந்த தேதி மாதம் வருடத்தில் பட்டா மாற்றினார் என்று எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ. 4 சிட்டாவில் கண்ட சொத்துகள் எந்த ஆவணத்தின் அடிப்படையில் ஏற்பட்டது என்றால் பாகப்பிரிவிணை ஆவணத்தின் அடிப்படையில் ஏற்பட்டது. அந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை அந்த ஆவணம் வாய்மொழி ஆவணம் . பி.வா.சா.ஆ. 5 ல் கண்ட சொத்துகள் அனைத்தும் எனது தகப்பனார் பெயரில் பட்டா உள்ளது. பி.வா.சா.ஆ.5 கண்ட சொத்தை பொறுத்து எனது தகப்பனார் 2006 ல் உயில் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான். 2006 ல் உயில் எழுதி பிறகு 2008 ல் எனது தகப்பனார் காலமானார். எனது தகப்பனார் உயில் எழுதிய விபரம் எனக்கு 2010 ல் பீரோவை சுத்தம் செய்யும்போது தான் தெரியும் . 2010 ல் உயில் எனது

கையில் கிடைத்த நிலையில் ஏன் பட்டா மாற்றவில்லை என்றால் சொத்துகளை ஒத்திவைத்திருந்தார் அதனால் பட்டா மாற்றம் செய்யவில்லை. நான் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் பி.வா.சா.ஆ.5 கண்ட சொத்துகளுக்கு ஏன் பட்டா மாற்றவில்லை என்பதை பொறுத்து குறிப்பிட்டு மறுக்கவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே வாதியால் கொடுத்த அறிவிப்பிற்கு ஏன் பதில் கொடுக்கவில்லை என்றால் நான் பெற்றுக்கொள்ளவில்லை அதனால் நான் பதில் கொடுக்கவில்லை. நான் அறிவிப்பினை பெற்றுக்கொள்ளாத காரணமே உயில் தயார்செய்வதற்காக கால அவகாசத்திற்காக பெற்றுக்கொள்ளவில்லை. 2006 ல் எழுதபெற்ற உயில் கைவசம் இருந்தால் அதனை உடனே பதில் அறிவிப்பினை அனுப்பிருப்பேன் என்றால் சரியல்ல. மோகன்தாஸ் த/ பெ . மாரியப்பன் . பட்டவெளி கிராமம் , சித்தமல்லி அஞ்சல் , மன்னார்குடி தாலுக்கா என்பது எனது முகவரிதான். இந்த வழக்கில் உள்ள 5ம் பிரதிவாதிக்கு செல்வி என்ற பெயரும் உண்டு அவரின் கணவர் பெயர் தைனேஸ்வரன் அவர் 04.03.2013 ல் அவரது தகப்பனார் இறந்தபிறகு 1/10 பாகம் கேட்டு நோட்டீஸ் அனுப்பினார் நான் அந்த சமயத்தில் வெளியூரில் சென்னையில் இருந்தேன் அதனால் நோட்டீஸ் பெற்றுக்கொள்ளவில்லை. எனது தகப்பனாரின் ஆண் வாரிசுகள் நானும் யோகானந்தமும் இருந்தோம். யோகானந்தம் திருமணம் ஆகாமல் வீட்டில் கோவித்து கொண்டு வெளியல் இருந்தால் அவர் பதில் கொடுத்தார என்றால் தெரியாது. உண்மையில் பி.வா.சா.ஆ.6 ல் எழுதப்பட்டு கைவசம் இருந்தால் 04.03.2013 அறிவிப்பில் நான் 5ம் பிரதிவாதிக்கு பதில் கூறியிருப்பேன். பி.வா.சா.ஆ.6 உயில் ஆவணத்தை 07.11.2017 நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு முன்பு வேறு எந்த அலுவலகத்திலும் நான் முன்னிலை படுத்தவில்லை. அதற்கு காரணம் அந்த உயில் ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யபட்டது என்றால் சரியல்ல.

**(வாதிதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

Sd/– திரு. மோகன்தாஸ்

Sd/– திரு. கே. சக்திவேல்,
சார்பு நீதிபதி, மன்னார்குடி.